விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 8 ஜ. ஆங். பிறை 5 இதழ்: 242

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23-12-1990


## வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் 500 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் யுத்தத்தினால் ஐந்நூறு கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி. திரு ஆர் பிரேமதாசா கவலை தெரிவித்தார்.

இதேவேளை அகதிகளுக்கான நிவாரண செலவுகளுக்காகவும் பெருமளவு பணம் செலவிட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே திரு. பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார். (க)

## மாங்குளம் தகர்ப்பு விழா யாழ்.குடாவில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் முகாம் தகர்ப்பின் வெற்றிநாள் விழா

(4-ம் பக்கம் பார்க்க)

# கட்டுவனில் புலிகள் தாக்குதல்

# 10 ராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

## ஏழு போராளிகள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

**கட்டுவன் மினி முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிங்கள இராணுவத்தை இடைமறித்து விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும், சில இராணுவத்தினரின் சடலங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.**

**இம் மோதலில் ஏழு புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.**

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் கட்டுவன் மினி முகாமிலிருந்து வெளியேவர முயற்சித்த சிங்கள இராணுவத்தை முன்னேறவிடாது புலிகள் வழிமறித்து கடுமையான தாக்குதலை நடத்தினார்கள்.

இந்த தாக்குதலில் இராணுவத்தரப்பில் பத்துப்பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் எட்டு மணித்தியாலங்கள் இருபகுதியினரிடையேயும் கடும்சண்டை நடைபெற்றது.

புலிகளின் விடாப்பிடியான தாக்குதலினால் நிலைகுலைந்த படையினர் நண்பகல் 1-00 மணியளவில் இழப்புக்களுடன் பின்வாங்கிச்சென்றனர்.

ஏ. கே. எல். எம். ஜி. - 1, இதற்கான மகசீன் 1, லிங்-595, 203 துப்பாக்கி(டொங்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாவற்குளத்தில் மோதல் படையினர் பின்வாங்கினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலையடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றதுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## வேடிக்கை பார்த்தவருக்கு கடுமையான எச்சரிக்கை

(காங்கேசன்துறை)

வீதிகளில் ஒழுங்கற்று நின்று வேடிக்கை பார்த்து வீதியைத் தடைசெய்த பலர் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

நேற்று வலி, வடக்கில் நடந்த கடும் மோதலின் போது காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டிருந்த வாகனங்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதிகளில் நின்று பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் வீதியில் சென்ற பலர் விடுதலைப் புலிகளால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

## கொண்டச்சி மோதலில் 6 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கொண்டச்சி முகாமிலிருந்து முந்திரிகைத் தோட்ட முகாமுக்கு ரோந்து சென்ற படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## தளபதி விஜேரத்தினாவின் உடல் காலியில் அடக்கம் செய்யப்பட்டது

(கொழும்பு)

திருமலையில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி பலியான இராணுவத் தளபதி பிரிகேடியர் லஷ்மன் விஜேயரத்னாவின் இறுதி ஊர்வலம் நேற்று காலியில் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் 1500

(4ம் பக்கம் பார்க்க)

## ஒன்பது தமிழர்கள் வாழைச்சேனையில் கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் அண்மையில் சிங்கள ஊர்காவல் படையினரால் ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

வீடுகளிலிருந்த இவர்கள் ஊர்காவல் படையினரால் வெளியே இழுத்துவரப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு நல்லதம்பி கந்தசாமி, பேய்த்தாலை ஆறுமுகம் நட

(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்கள் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலின் வெற்றி நாளையொட்டி மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் தொற்றுநோய் பரவுகிறது

(வேலணை)

வேலணை, சரவணை, சின்ன மடு, சுருவில் நாரந்தனை ஆகிய இடங்களில் முகாம்களில் தங்கியிருப்போர்களுக்கு வயிற்றோட்டம், கண்நோய், சொறி சிரங்குஆகிய தொற்று நோய்கள் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரப் பகுதியினரால் இதுவரை முகாங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த படையினர் விமான மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலையடுத்து பலாலி விமான நிலையத்திற்கு உடனுக்குடன் விமானங்கள் வந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர் இவ்விமானங்களில் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

## சீவல் தொழிலாளி வெட்டிக்கொலை!

(வேலணை)

சீவல் தொழிலை மேற்கொள்வதற்காக கரம்பொன் கிராமத்திற்குச் சென்ற சீவல் தொழிலாளி மர்மமானமுறையில் வெட்டப்பட்ட நிலையில் வீதியில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்

(4ம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்கு பகுதியில் பயங்கர ஷெல் தாக்குதல்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் நேற்று கடும் மழையின் மத்தியிலும் பயங்கர ஷெல் தாக்குதல் நடைபெற்றது.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-4158)

மட்டுவில் வடக்கு, முத்துமாரி கோவிலடி. குடியிருப்புக் காணி 23 பரப்பு. பிரயோசனமுள்ள இளந்தென்னைகள், பனைகள் அடங்கியது. உடன் விற்பனைக்குண்டு (பிரித்துக் கொடுக்கப்படும்) தொடர்பு; சரவணமுத்து தியாகராசா, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (சி-4199)

### கல்வி

O/L 90, 91 கணிதம் கற்பிக்கப்படும். கற்பித்தலால் விசேட சித்தியும், அதிவிசேட சித்தியும் அடையமுடியும். மீட்டல் வினா விடை கற்பிக்கப்படும். தொடர்பு: ஆசிரியர் நாதன் B. Sc. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
(சி 4197)

### புதுமுறை பரிசில்கள்

பழைமை மாற்றி புதுமை பேணுங்கள் நண்பர்கள் உறவினருக்குவாழ்த்துக்கூற அரிய பரிசில்களாக அன்பளிப்பு செய்ய ''நான்'' வெளியீடுகளை பயன்படுத்துங்கள் ''நான்'' வெளியீடுகளை புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி 4182)

### தமிழ் மாதிரி வினா விடை

காரை; செல்வராசா எழுதிய க. பொ.த உயர்தர (A/L) வகுப்பு மாணவர்களுக்கான பகுதி I, II முன்னோடி வினாவிடை புத்தகம் சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம், விலை ரூ 22 மட்டுமே.
(சி 4200)

# நாய்கள் கடித்து 5 மாணவருக்கு காயம்

(மானிப்பாய்)

நவாலியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் அதிகமானவர்கள் வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து இப்பகுதியில் தங்கியுள்ளனர். இவர்களுடன்கூட வந்த நாய்கள் உணவின்றி வீதிகளிலே அலைந்து திரிகின்றன.

கடந்த வாரம் நவாலி சின்னப்பா வீதியில் ஐந்து பாடசாலை மாணவர்களுக்கு நாய்கள் கடித்து அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (71)

## சங்கானையில்
# 17,000 குடும்பங்களுக்கு இலவச நிவாரணம்

[சித்தன்கேணி]

வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 17 ஆயிரம் குடும்பங்கள் தற்போது வழங்கப்பட்டுவரும் இலவச உலர் உணவுகளை பெற்றுவருகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் இருந்து நிரந்தரமாக வசிக்கும் சுமார் 15 ஆயிரம் குடும்பங்களும், வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 500 குடும்பங்களும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்துள்ள சுமார் 1500 குடும்பங்களும் மொத்தமாக 17 ஆயிரம் குடும்பங்கள் இந்த இலவச உலர் உணவுகளை பெற்றுவருகின்றன. [137]

# திருவருகைக் காலம்
## 4ம் வாரச் சிந்தனை

மனித வாழ்வின் நிறைவுக்கு உறவு அத்தியாவசியமானது. உறவை வெளிப்படுத்த ஒருவருக்கொருவர் பிரசன்னமாய் இருப்பது மனித இயல்பு. மனிதன் வாழ்வதும், வளருவதும் உறவிலேதான். முக்கியமான குடும்ப நிகழ்ச்சிகளிலோ அல்லது கொண்டாட்டங்களிலோ உற்றார், உறவினர் ஒன்றுகூடித் தம் உறவை வெளிப்படுத்துகின்றனர். இன்பத்திலும், துன்பத்திலும் ஒன்றுகூடிப் பகிர்ந்துகொள்ளும்போது உறவு வலுப்படுகின்றது.

உறவுகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்கும் இறைவன் உலகில் வாழும் மனிதனோடு உறவுகொள்ள விரும்பினார். மனித இதயங்களிலே குடிகொண்டு தன் அளவில்லா அன்பைப் பகிர்ந்து வாழ விரும்பினார். மாட்சிமிகு இறைவன் மனித நிலைக்குத் தன்னைத் தாழ்த்துவதன் மூலம் மனித உறவுகளுக்கு நிறைவளிக்க விரும்பினார்.

இறைமகன் கிறிஸ்து, மண்ணிலே மனு உருவாகி இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஓர் உறவின் பாலமாகத் தன்னை ஆக்கிக்கொண்டார். இந்த உறவையே நாம் மார்கழி 25ல் நினைவு கூருகின்றோம். அன்புறவில் நிறைந்திருக்க, இறையுறவில் வளர்ச்சிபெற வரவிருக்கும் கிறிஸ்துவின் பிறப்பு விழா எமக்கு வழிவகுப்பதாக!

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

# என்ன சங்கதி?

முத்திரைச் சந்தையில் நிறையக் கூட்டம். மூன்று மினி பஸ் ஏற்கனவே சென்றுவிட்டன. பஸ்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன.

கடைசி பஸ் புறப்படத் தயாரானது. பெண்கள்தான் அதிகம். வயோதிபர்கள், குழந்தைகள், சிறுவர்கள், இளம் பெண்கள் நிரம்பி வழிந்தனர். இளைஞர்கள் இரண்டொருவர் மட்டும்தான்.

வெளியில் உறவினர், நண்பர்கள், பெற்றோர்கள் வழி அனுப்ப வந்து நின்றனர்.

எல்லோரும் கையை அசைத்து வழியனுப்பினார்கள். சிலர் கண் கலங்கினார்கள். என் உறவினர், நண்பர்கள் எவரும் செல்லவில்லை. ஆனாலும் இந்த மண்ணை விட்டு அவர்கள் செல்வது எனக்கு வேதனை தந்தது

பஸ் புறப்பட்டுச் சென்ற பின், என் அருகில் நின்ற வயோதிபர் துவாயால் வாயைப் பொத்திக்கொண்டு குழந்தை போல் அழுதார்.

''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டேன்

''என்னையும் கூட்டிக்கொண்டு போகவில்லை. எல்லோரும் போகிறார்கள்; வீட்டுக் காவலுக்கு என்னை மட்டும் விட்டுவிட்டார்கள்'' என்றார். பரிதாபமாக இருந்தது.

'ஊரோடி'

## கல்விக்குரிய நூல்கள்
# நூலகத்திற்கு வழங்க ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உயர்தர கல்விக்கு வேண்டிய உசாத்துணை நூல்களை நூலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ் உள்ளூராட்சி ஆணையாளர் திரு சு. டிவகலாலா உள்ளூராட்சிமன்ற தலைவர்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இவ்வருடத்துக்குரிய நூலக நன்கொடை பணத்தை யாழ் உள்ளூராட்சித் திணைக்களம் அண்மையில் அனுப்பிவைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. [153]

# கொழும்பில் இலவச அக்கியூப்பஞ்சர் சிகிச்சை

(மாங்குளம்)

நோயாளர்களுக்கு அக்கியூபங்சர் சிகிச்சை கொழும்பில அளிக்கப்படவிருக்கிறது

சீனாவில் பிரபல்யம் பெற்ற அக்கியூபங்சர் மருத்துவத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழும் திருமதி டாக்டர் ராதா தம்பிரா இந்த இலவச கிளினிக்கை நடத்தவிருக்கின்றார்.

ஐரோப்பாவில் அக்கியூபங்சர் மருத்துவத்தை வைத்தியர்களுக்குப் போதித்துப் பயிற்றுவிப்பதிலும், அந்த மருத்துவ முறையைப் பயன்படுத்தி, நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் கடந்த பல வருடங்களாகத் தீவிரமாக ஈடுபட்டுவரும் திருமதி தம்பிராசா, இலவச சிகிச்சையை மீண்டும் அளிப்பதற்காக இம்மாதம் பிரிட்டனில் இருந்து இலங்கை திரும்புகிறார். (150)

## வசாவிளான் உதவிப்பணம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதி பொதுசன உதவி பெறுபவர்களுக்கான உதவிப்பணம் தற்காலிகமாக இயங்கும் ஊரெழு உபதபால் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.

## திருவெம்பாவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நவீன சந்தை ஞானவைரவர் ஆலய திருவெம்பாவை இன்று ஆரம்பமாகி இம்மாதம் முப்பதாம் திகதி வரை சிறப்பாக நடைபெறும். (எஸ்)

## உபஅலுவலக வேலைகள்

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உப அலுவலங்களான மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி ஆகியவற்றின் வேலைகள் தற்போது மல்லாகம் உபஅலுவலகத்தில் வைத்துச்செய்யப்பட்டு வருகின்றன. (109)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1920-02-10
மறைவு: 1989-12-10
திதி: 1990-12-23

அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து
இன்று ஓராண்டு
ஆகியும்,
இன்றும் உம் பசுமை
நினைவுகள்
எம்மை விட்டுப்
பிரியாது துடிக்கிறோம்.

### கந்தையா செல்லத்துரை

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

சிதா பவனம்,
மானிப்பாய்
வடகிழக்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.
(சி-4195)


## இராசி பலன்

23-12-1990
ஞாயிற்றுக்கிழமை

ஷஷ்டி பி. ப. 4-59 வரை, சதயம் மாலை 5-52 வரை, சித்தயோகம், இராகுகாலம் மாலை 4-55 முதல் 6-15 வரை, நல்லநேரம் 9-35 முதல் 10-55 வரை விநாயகர் ஷஷ்டி விரதம்.

மேடம்- அன்பான உபசரணை, தொழில் லாபம், குடும்ப சந்தோஷம், உல்லாச பொழுதுபோக்கு.

இடபம்- குடும்பவிரோதம், வீண்பிரயாசம், அயலவர் நட்பு, தாய்வழி உறவு.

மிதுனம்- ஏமாற்றம், மனக்குறை, தொழிலாளர் விரோதம், குடும்பப்பிரிவு, பகை.

கடகம்- தொழில் கஷ்டம், குடும்ப செலவு, பகைவர்கள் தொல்லை, எதிர்பாராத பண வரவு.

சிங்கம்- மகிழ்ச்சியான சம்பவம், குடும்ப மகிழ்ச்சி காரிய வெற்றி, தொழில் முன்னேற்றம்,

கன்னி- மாமனார் உதவி, குடும்பத்தில் சுபகாரியம், உல்லாச பயணம், சகோதரர் உதவி.

துலாம்- கடும்துயர், பணச்செலவு கருத்து வேற்றுமை, அலைச்சல்மிகுதி, ஆடம்பரம்,

விருச்சிகம்- தடுமாற்றம், அந்நியர் உதவி. தொழில் பாதிப்பு, கடிததொல்லை.

தனுசு- மனநிறைவு, காரிய வெற்றி. புதிய சிந்தனை, கடன் வரவு, பெருமை

மகரம்- குடும்பவிரோதம், அதிகாரிகள் சினம். வேண்டாத உறவு, மனச்சுமை,

கும்பம்- கல்வியால் புகழ், விருந்துபசாரம், தொழில் லாபம், குடும்ப உல்லாசம்.

மீனம்- எதிர்பாராத செலவு, மாமனார் தொல்லை, அலைச்சல் மிகுதி, அந்நிய வாசம், கடன்.

ஜோஸ்யர்.

## காலத்தின் பேருதவி!

பஞ்சமா பாதகங்கள் அனைத்தும் புரிந்து, விரட்டியடிக்கப்பட்டு, கஞ்சிக்கும் வழியின்றி பஞ்சத்தின் மடியில் வாழ்ந்துவரும் தென் தமிழீழ மக்களைக் கொடிய நோய்களும் வாட்டி வதைக்கின்றன!

வாந்திபேதி, வயிற்றோட்டம், சோகை, மஞ்சள் காமாலை என்பன பஞ்சம் என்ற கொடும் அரக்கி பெற்றெடுக்கும் அசுரக்குழந்தைகளாகும்.

உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு மக்கள் ஓட்டமும் நடையுமாக முகாம்களையும், காடுகளையும் தேடி ஓடி ஒதுங்கினால் வயிற்றோட்டமும் வாந்திபேதியும் யமதூதராக உருவெடுத்து பிஞ்சுக் குழந்தைகளை கருவழித்து வருகின்றன!

உயிருக்கு அஞ்சி ஓடிய டாக்டர்களும், வேலைக்குத் திரும்பவில்லை என்ற காரணம் காட்டி அரசு வேலை நீக்கமும் செய்து விட்டது!

சீர்குலைந்த நாட்டிலிருந்து ஆயிரமாயிரம் டாக்டர்கள் வெளிநாடுகளுக்கும் புகலிடம் தேடி ஓடும் இக்கால கட்டத்தில் ஒரு சில டாக்டர்களே பல துன்பங்களின் மத்தியிலும், கிழக்கிலங்கையில் கடமையாற்றி வந்தனர். அவர்களையும் விரட்டியத்து விட்டு வேலை நீக்கமும் செய்து அரசு வேடிக்கை காட்டுகிறது!

அவலத்துக்குள்ளாகி தவிக்கும் கிழக்கிலங்கை மக்களின் வைத்திய சேவைக்கு ஆகக் குறைந்தது 235 டாக்டர்கள் அவசியம் தேவைப்படுகின்றனர். அவர்களை நியமிக்க சுகாதார அமைச்சு தொடர்ந்து தனது அசமந்த போக்கையே காட்டிவருகிறது!

உயிரோடு, வெட்டியும், சுட்டும், எரித்தும், படுகொலை செய்யத் தூண்டும் நடவடிக்கைகளுக்கு தூபமிட்டு வரும் அரசு உயிர்களைக் காக்கும் டாக்டர்களை நியமனம் செய்யும்என்று கனவுகாண்பது முதலைவாய் அகப்பட்ட தவளை மூச்சுவிட கால அவகாசம் கேட்ட கதையாகத்தான் முடியும்!

எம் மக்களின் துயர் துடைக்க முடிந்தளவு தமிழ் தொண்டர்களும், தொண்டு நிறுவனங்களும் முன்வந்து வைத்திய வசதிகள் செய்வது காலத்தின் கண் செய்த பேருதவியாகும்!

— மயூரன்.

## மார்கழி பஜனை

(யர்ழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோணந்தோட்டம் சேரன் வீதியில் இருந்து ஆரம்பமாகும் மார்கழிப்பஜனை தினமும் அதிகாலையில் நடைபெற்று வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் முடிவுறும். இன்றையதினம் பஜனைச் சிறுவர்களுக்கு பரிசில்களும் பொங்கல்களும் வழங்கப்படும். (எஸ்)

# உடுபிடவைகள் பணம் சேகரிப்பு

[மானிப்பாய்]

தென்தமிழீழ மக்களுக்கு உதவும் பொருட்டு நவாலியில் உடுபுடவைகள், பணம், மற்றும் பல்வேறு பொருட்களும் சேகரிக்கப்பட்டது.

இப்பணியில் நவாலி மேற்கு சனசமூக நிலையம், நவாலி வடக்கு ச.ச. நிலையம், நவாலி வளர்மதி ச. ச நிலையம், முரசொலி ச. ச. நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். (71]

# 25 வருடங்கள் சேவை செய்தவர் வண. யேசுநேசன்

(யாழ்ப்பாணம்)

இன, மத, வேறுபாடின்றி பொதுமக்களுக்கு சேவையாற்றி 25 வருடங்களை வெற்றிகரமாக கடந்து வீறுநடை போடும் வண. யேசுநேசனை நான் மனமார வாழ்த்துகின்றேன்.'.

இவ்வாறு குருத்துவ விழாவில் 25 வருடங்களை பூர்த்தி செய்த வண பிலிப் யேசுநேசன் அடிகளாரை கௌரவிக்குமுகமாகயாழ் சென். பற்றிக்ஸ்கல்லூரிபழையமாணவர்கள் நேற்று முன்தினம் அளித்த வரவேற்புபசார வைபவத்தில் பழைய மாணவர் திரு. துரை ஆரோக்கியதாசன் கூறினர்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் வண. பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருவாளர்கள் எஸ் எவ், அல்போன்ஸஸ். டபிள்யூ ஏ. ஞானரட்ணம், ஏ. வி; ஏ: ஜே. விஜயரட்ணம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மேற்படி வைபவத்தின் ஆரம்பத்தில் யேசுநேசன் அடிகளாரையும், குருத்துவ வாழ்வில் 75 வருடங்களைப் பூர்த்தி செய்த வில்வரசசிங்கத்தையும் பழைய மாணவர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். செயலாளர் திரு. எஸ். இராஜசிங்கம் நன்றி கூறினர்

வெள்ளி விழா கொண்டாடும் யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் உப அதிபரான யேசுநேசன் அடிகளாருக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் தலைமையில் மாணவர்களும், பெற்றோர்களும் பெருமளவில் வரவேற்புபசார வைபவம் ஒன்றை நேற்று முன்தினம் நடாத்தியது குறிப்பிடத்தக்கது. (வி)

## உயர்வான தியாகங்கள் வேண்டுமடா!

ஈழம் மலர்ந்திட வேண்டுமடா — குல
மானம் நிமிர்ந்திட வேண்டுமடா
ஈனம் தொலைத்திட வேண்டுமடா — இதைக்
கானம் இசைத்திட வேண்டுமடா!

செந்தமிழ் ஆண்டஎம் ஈழமடா — இதைச்
சிந்தையில் வைத்திடவேண்டுமடா
முந்தையர் வாழ்ந்தஎம் ஈழமடா — மீள
வென்றிதை ஆண்டிட வேண்டுமடா!

நீதி நிலைத்திடவேண்டுமடா — நூறு
சாதி தொலைத்திட வேண்டுமடா
நியாயம் களைத்திடவேண்டுமடா — மக்கள்
நேயம் செழித்திட வேண்டுமடா;

உயிரான விடுதலை வென்றிடவே ட உன்
உடலாவி பொருளாதர வேண்டுமடா
உயிர்வாழ விடுதலை வென்றிடவே — மிக
உயர்வான தியாகங்கள் வேண்டுமடா!

உடன்பிறப் பென்றெம்மைச் சொல்லுகின்றார் — எம்
உரிமைகள் கேட்டிடச் செல்லுகின்றார்
உற்றவர் இதைக்கேட்டால் துள்ளுகின்றார் — இது
மற்றவர்க் கெதற்கென்றும் கொல்லுகின்றார்!

நாற்பது ஆண்டாக ஏமாந்தோம் — என்றும்
நாயிலும் கீழாக நாம் மாய்ந்தோம்
நாற்பது ஆண்டாக ஆராய்ந்தோம் — நாம்
வேருகச் சென்றால்தான் இனிவாழ்வோம்!

நாளைய தமிழினம் வாழ்ந்திடவும் — உன்னை
நாளைய தமிழினம் வாழ்த்திடவும்
காளையே! புலியென எழுந்திடடா — தமிழ்
ஈழம் மலர்ந்திங்கு பொலித்திடவே!

— குன்றுதோருடி.

### நவாலியில் கலையரங்கு

(மானிப்பாய்)

நவாலி இளம் கலைஞர் மன்றத்தினர் நவாலியில் கலையரங்கொன்றை நிறுவுவதற்கு முன்வந்துள்ளனர்.

மன்னார் தீவில

# இராணுவ நடவடிக்கையால் மக்கள் கோவிலில் தஞ்சம்

(மாங்குளம்)

மன்னார் தீவில் இராணுவ நடவடிக்கையால் பேசாலைப் பகுதி வெறிச் சோடிக்காணப்படுகிறது. பேசாலை யூட்லி வீதி வாடிப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் இல்லை. எல்லோரும் வீடுகளை விட்டு வெளியேறி பேசாலை வெற்றிநாயகி ஆலய மண்டபத்தில் சமைத்து சாப்பிட்டு விட்டு கோயிலில் தங்குகின்றனர்.

மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி கோவிலில் தஞ்சம் அடைந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து வீடுகளிருந்து உணவுப் பொருட்கள் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. பேசாலை யூட்ஸ் வீதியில் சில வீட்டுக் கதவு ஜன்னல்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதியிலிருந்து அதிகமானோர் இந்தியா சென்று விட்டதால் மன்னார்தீவில் மிககுறைவான மக்கள் மாத்திரமே இருப்பதாக கூறப்படுகிறது பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் உப உணவுப் பொருட்களைக் கொண்டே மக்களது வாழ்க்கை நடைபெறுகிறது. அதுவும் ஒழுங்காக வழங்கப்படாவடில் பட்டினியால் கஷ்டப்படவேண்டி இருக்கிறது சிறு குழந்தைகள் பாலுணவின்றி கஷ்டப்படுகின்றனர். போக்குவரத்துத் துண்டித்திருப்பதால் வெளிமாவட்டங்களிருந்து உணவு வகைகள் பெற முடியவில்லை.

மன்னார் தீவுப்பகுதி மக்களிடம் பணப்புழக்கமும் இல்லை, கடிதத் தொலைத்தொடர்புகளும் இல்லை. பணச் சுற்றோட்டமின்றி மக்கள் தங்களிடமுள்ள உணவுப் பொருட்களைக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர். (150)

## நால்வேதத் துறைவோனே! வேதாந்தப் பொருளோனே!!

ராகம்: கௌளை தாளம்: ஆதி

பல்லவி

பாடாத நாளெல்லாம் வீண்நாளைபா - உன்னைப்
பாடாத பாட்டெல்லாம் வீண்பாட்டையா -கணேசா
[பாடா...]

அனுபல்லவி

நால்வேதத் துறைவோனே நாதாந்த வடிவோனே!
வேதாந்தப் பொருளோனே ஏகாந்தத் திருப்போனே!!
[பாடா...]

சரணம்

பூமீதும் வான்மீதும் புகழ்பூத்த தமிழாலே - செந்
தீமீதும் நீர்மீதும் எதிர்நின்ற தமிழாலே - வெண்
அலைமீதும் மலைமீதும் நிலைநின்ற தமிழாலே - என்
நாமீது நடமாடும் தேனூறும் தமிழாலே - நான்
[பாடா...]

— முருகு.

★ (இன்று) (23-12-90) விநாயக விரதம் நிறைவு பெறுகின்றது.

மாங்குளம்

## முகாம் தகர்ப்பு ஒளிப்பதிவுநாடா

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது குறித்த ஒளிப்பதிவு நாடா நேற்று முன்தினம்வெளியிடப்பட்டது

வன்னிப்பிராந்திய தளபதி பால்ராஜ் பேட்டியும் லெப். கேணல் திலீப்பின் பேட்டியும் இவ் ஒலிப்பதிவு நாடாவில் வில் பதியப்பட்டுள்ளன. (க)

மகாபொல

## கொடுப்பனவு அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

மகாபொல கொடுப்பனவு நூற்றியம்பது ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை வர்த்தக வாணியத்துறை அமைச்சர் எம், எம். மன்சூர் நீர்கொழும்பில் நடைபெற்ற மகாபொல விழாவில் அறிவித்துள்ளார்.

மகாபொல கொடுப்பனவு சுமார் இருபதினாயிரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (எஸ்)

## பலதும் பத்தும்

### அன்னை திரேசா

அன்னை திரேசா ஆதரவற்றவர்களின் தாய். பாதிக்கப்பட்டவர்களின் செவிலித்தாய். மனிதகுலத்தின் அவதார புருஷர். மனித நேயத்தின் சின்னம். இதுவரை அவரது பணிகளை உலகத்தில் கௌரக்காத அமைப்புகளே இல்லையெனலாம். அவர் கௌரவத்தை தேடிச்செல்லவில்லை கௌரவம் அவரைத்தேடிச் சென்றுள்ளது. அவருக்கு கிடைத்த விருதுகள் இதனை வெளிப்படுத்துகின்றன: 'பத்மஸ்ரீபட்டம் (1962) ரோமோர் ரமக்ஸே அவர்டு (1962) போப் ஜோன் (xxiii) சமாதானப் பரிசு (1971) குட்ஸாமாரிடன் அவர்டு (1971) கௌரவ டாக்டர் பட்டம் (1971) ஜவர்லால் நினைவு விருது (1972) டெம்ப்சன் டொலேசன் விருது (1972) இந்திரா காந்தி பரிசு- இந்தியா முழுவதும் (இலவச பயண பரிசு) இம்பீரியல் கெமிக்கல் நிறுவன நினைவக பரிசு [13 லட்ச சொத்து] பிரிட்டிஷ் எம்பயர் விருது [1978] மான்சஸ்டர் சர்வதேச விருது (1979) நோபல் பரிசு [1979] பாரதத்தின் (1980) இதனைவிட பத்தாண்டுகள் 50 விருதுகளைப் பெற்றுள்ளார்.

— ஞானி

ஓய்வூதியம் பெறுவோருக்கு

# காசும் இல்லை காசோலையும் இல்லை

(மாங்குளம்)

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியர்களுக்கு காசும் இல்லை, காசோலையும் இல்லை.

இக்கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது காசை எடுக்கச் சென்றால் பணம் வந்துசேரவில்லை என்று கூறுகின்றனராம்.

காசோலையாகத் தருப்படி கேட்டால் காசோலைப் புத்தகம் முடிந்துவிட்டதாக கூறுகின்றனராம்.

இதனால் ஓய்வூதியர்கள் எதுவுமற்ற நிலையில் வறுமையில் வாடுகின்றனர். (150)

## இன்று நினைவஞ்சலிக் கூட்டம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த கோப்பாய் முன்னாள் பிரதேசப் பொறுப்பாளர் கப்டன் காந்தியின் மூன்றும் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 பணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய திறந்த வெளியரங்கில் நிலையத்தலைவர் திரு தேவகுமார் தலைமையில் நடைபெறும். (154)

## அகதி முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள நோயாளர்களுக்கு நோய்களுக்குரிய மருந்து வகைகள் எதுவும் கொடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வலி வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஷெல் தாக்குதலினால் வீமன்காமம், தெல்லிப்பழை, ஏழாலை, மல்லாகம் பகுதிகளில் ஏராளமான வீடுகள் கட்டிடங்கள் சேதமாகின.

அடுத்தடுத்து வெடிக்கும் நவீனரக ஷெல்களும் நேற்று இராணுவத்தால் ஏவிவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (86)

## சிவல் தொழிலாளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற இச்சம்பவத்தில் நாரந்தனை தெற்குப் பகுதியைச் சேர்ந்த திரு சிவாக்கின் (வயது 40) என்பவரே இவ்வாறு வெட்டுண்டுஇறந்தவராவார்.

## பல்கலைக்கழகம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இரத்ததானம் வழங்கினார்கள்.

மேஜர் மூரளியின் நினைவு நாளாகிய இன்றைய தினம் மறுமலர்ச்சிக் கழகத்தின் ஒழுங்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிரமதானம் செய்யவுள்ளனர்.

## மாங்குளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ். குடாநாடெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், தீவுப்பகுதி எங்கும் இந்நாளையொட்டி கூட்டங்கள் நடைபெற்றன.

வீதிகள், சந்திகள் மற்றும் பொது இடங்களில் பந்தல்கள் அமைத்துகரும்புலிபோர்க்கின் படத்திற்கு மலர் அணிவித்தும் மற்றும் மஞ்சள், சிவப்பு நிறங்களில் மாலைகளினால் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

குழந்தைகளுக்கு

# பிறப்புச்சான்றிதழ் பெறுவதில் கஷ்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பரிஷ் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரர் அலுவலகத்தில் பிறப்புப்பதிவுப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ்களை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையிலும், மற்றும் வீடுகளிலும் பிறந்த குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் கடந்த பலமாத காலமாக வழங்கப்படவில்லை. (72)

## திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீனசந்தை ஞானவைரவர் ஆலய வருடாந்த திருவெம்பாவை உற்சவம் இம்முறையும் வழமைபோல் இன்று ஆரம்பமாகி முப்பத்தோராம் திகதி வரை நடைபெறும். (எஸ்)

ஓய்வூதியம்

## பணமாக வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் கிராமிய வங்கிகளில் இருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவ்வங்கிகளில் வைத்தே பணமாக ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (154

# கிராமோதய சபைகளை புனரமைக்க நடவடிக்கை

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமோதய சபைகளையும் மீளபுனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் திரு ஆர். அபேரத்தின சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்

இச்சுற்று நிருபத்தில் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கும் ஒவ்வொரு கிராமோதய சபைகளை அமைக்குமாறும் அங்கத்துவம் வகிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளில் இருந்து தலைவரை தெரிவுசெய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கிராமோதய சபைகளை புனரமைத்து அடுத்தாண்டுக்கால அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்குமாறும் சுற்றுநிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [137]

# போர் விமானங்களின் நடமாட்டம் அதிகரிப்பு

(வேலணை)

வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் அடிக்கடி ஹெலிகொப்டர், சீ-பிளேன், பொம்மர்களின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் இப்பகுதிகளில் விவசாயம் மற்றும் இதர தொழில்களை மேற்கொள்ள முடியாத அவலநிலை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கு மாணவர் மாணவிகள் தயங்குகின்றார்கள். அச்சம் காரணமாக பாடசாலைகளில் மாணாக்கர்களின் வரவு குறைவாகவே காணப்படுகிறது.

## பாவற்குளத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆயுதங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

## ஹெலி தாக்குதல்

இதேவேளையில் பம்மைமடு பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து குடிமக்கள் வாழும் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டதுடன் ஜோசப், காமினி வித்தியாலய இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

நெடுங்குளம், பம்மைமடு பகுதிகளை நோக்கி நடாத்தப்பட்ட இச்ஷெல் தாக்குதலை அடுத்து இப்பகுதியிலுள்ள 75 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இம்மோதலின்பின் இராணுவத்தினர் முகாமிற்கு திரும்பிச் செல்கையில் பொதுமகன் ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளார்கள். (வி)

## ஊரடங்குச் சட்டம் நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை முதல் நீக்கப்பட்டுவிட்டது.

இதேவேளையில் வவுனியா, முல்லைத்தீவு பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

## நேற்றிரவு பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

நேற்றிரவு பல தடவைகள் பலாலி இராணுவமுகாம்பகுதிகளிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் விழுந்து வெடித்தது.

இந்த தாக்கிதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. [வி]

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சென்ஜோன்ஸ் அம்புலன்சின் இலங்கைக்கிளையினால் நல்லூர் படை அத்தியட்சகர் பிரிவுகளுக்கு நடாத்தப்படும் பரீட்சை நாளை கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர், கொக்குவில், தாவடி ஆகிய இடங்களிலுள்ள மத்திய பிரிவுகளையும் கொக்குவில்மேஜரர் பிரிவிலுள்ள சகல முதலுதவிப் பரீட்சார்த்திகளையும் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு படை அத்தியட்சகர்கள் கேட்டுள்ளனர்.

## ஒன்பது தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா (22-வயது) வாழைச்சேனை நல்லதம்பி பாலையா (37-வயது) ஆகியோர் உட்பட ஒன்பது தமிழர்கள் இச்சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டனர் (வி)

## தளபதி விஜே

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர்.

காலி டச்சுக் கோட்டை மைதானத்தில் திரு. விஜேரத்னவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

தென்மாகாண முதலமைச்சர் எஸ். அமரசிறி, இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா உட்பட பலர் இந்த இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர். (ரி)

## மாணவர் எழுச்சி ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளராக இருந்து வீரமரணமடைந்த மேஜர் முரளியினதும், அவரது வழியில் சென்ற மாணவர்களையும் நினைவுகூரும் முகமாக இன்று மாணவர் எழுச்சி ஊர்வலமும் நினைவு அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

மேஜர் முரளி, கப். காந்தி லெப், தர்சினி, சதா, மிகிந்தா, நிர்மலா, பஞ்சன், அமுதன், நிரா, நிதி ஆகியோரின் 3-வது நினைவு தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## வகுப்புகள்

(உடுவில்)

தையிட்டி கணேச வித்தியாசாலை மாணவர்களுக்கு தற்காலிகமாக இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயத்தில் வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன. (109)

# 82 பொலிஸ் நிலையங்கள் புதிதாக திறக்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் 82 பொலிஸ் நிலையங்கள் புதிதாக திறக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

18 பொலிஸ் நிலையங்கள் அடுத்த ஜனவரியில் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## கட்டுவனில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்) - 1. எம். 40 மி. மீ ஷெல் - 5, ரி 56 துப்பாக்கி-3, இதற்கான மகசீன்-7, ஐ. எம்.ரவைகள்-1375, நேட்டோ ரவைகள் 520, ஜீ. பி எம். சுழல் துப்பாக்கி -2, இதற்கான லிங்-9ல2, புகைக்குண்டு - 1 இராணுவத்தினரின்பின்வாங்கலைத் தொடர்ந்து ஒரு சில இராணுவத்தின் சடலங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இச்சடலங்களில் சில இன்று பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ளது.

இம்மோதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் சாம்சன் [செல்வநாயகம் செல்வச்சந்திரன், ஏழாலை[. ஸ்ராலின் [துரைரட்ணம் பகீரதன், கண்டிவீதி, யாழ்ப்பாணம்], அலன் [குருசாமி சிவராசா, மூல்லைத்தீவு], அஜீத்தா (சுகுணராணி கந்தையா, சாவகச்சேரி], ஆஷா (யோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை முல்லைத்திவு]. ரமா, ரதிகலா ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி-86)

## கொண்டச்சி

(1-ம் பக்கம் பார்க்க)

மிடையில் நடைபெற்ற மோதலில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஏ. கே. எல். எம். ஜீ. -1, ஏ. கே. எல். எம். ஜீ. மகசீன் - 4, அதற்கான லிங்-370, கோல்சர் - 2, ரி. 56 ரக துப்பாக்கி - 3, அதற்கான மகசீன் - 12, ஜே. ஆர். ரக குண்டு - 3 ஐ. எம். ரவைகள் 1350, கத்தி - 1.

புலிகளின் அதிரடித்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் நாளுட்டானைச் சேர்ந்த ஜோதிரவி, சங்கிலியன் ஆகிய இருபோராளிகள் வீரமரணமடைந்தனர் இவர்களுக்கும் புலிகள் வீரவணக்கத்தினை தெரிவித்துள்ளனர்.

கொண்டச்சி இராணுவ முகாம் விடுதலைப்புலிகளினால் சில மாதங்களுக்கு முன் முற்றாக தகர்க்கப்பட்டதும் 'பவல்' கவச வாகனம் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே. (வி)